# தினப்புயல்

PIN news

THINAPPUYAL

තිනප්පුයල්

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06


## 5 உயிர்களை காவு கொண்ட மரம்



கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சுற்றுவட்டம் அருகில் பஸ் மீது மரம் விழுந்து ஏற்பட்ட அனர்த்தத்தில் படுகாயமடைந்த 5 பேர் உயிரிழந்துள்ளனர்.

கொழும்பில் இருந்து தெனியாய நோக்கி பயணித்த பஸ் மீது கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சந்திக்கு அருகில் மரம் ஒன்று சரிந்து வீழ்ந்ததில் 17 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து காரணமாக பஸ்ஸில் சிக்கியவர்களை மீட்கும் முயற்சியில் பொலிஸாரும் விமானப்படையினரும் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இன்று (06) காலை 6 மணியளவில் கொள்ளுப்பிட்டி லிபர்ட்டி சுற்றுவட்டத்திற்கு அருகில் இந்த அனர்த்தம் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிப்பு



நோர்வே எழுத்தாளர் ஜோன் போஸுக்கு 2023 ஆம் ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டுள்ளது.

இலக்கியத்துக்கான நோபல் பரிசை தேர்வுக்குழு ஸ்வீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் இதனை அறிவித்துள்ளது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல் துறைகளுக்கான நோபல் பரிசு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட நிலையில், இலக்கியத்துக்கான நோபல் பரிசு இன்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கலும் கௌரவிப்பு நிகழ்வும்



மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களின் கீழ் "மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம்" எனும் நோக்குடன் மருதமுனையிலுள்ள விளையாட்டு கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்ற நிகழ்வு மனாரியன் 88 அமைப்பின் பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல்.முக்தார் அவர்களினால் முன்னெடுக்கப்படுகின்றன.

இது தொடர்பாக மருதமுனை மிமா விளையாட்டுக் கழகத்துடனான கலந்துரையாடல் பர்வின் ரெடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் ஆகிய நிறுவனங்களின் நிறைவேற்று பணிப்பாளர் அல் ஹாஜ் கலீல் முஸ்தபா அவர்களுடன் மருதமுனை ஆத்தியடி தோப்பில் 06.10.2023 அன்று இடம்பெற்றது. இதன் போது மருதமுனை மிமா விளையாட்டு கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டதுடன், மிமா விளையாட்டு கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் இந்நிகழ்வில் மருதமுனை இளைஞர் கழகங்களுக்கு உதவுவோம் என்னும் உதவி திட்டத்திற்காக அல் ஹாஜ் கலில் முஸ்தபா அவர்களை கௌரவிக்கும் வகையில் மருதமுனை மிமா விளையாட்டு கழகத்தினரால் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது. மேலும் பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை மிமா விளையாட்டுக் கழகத்துக்கு வழங்கி உதவிய அல் ஹாஜ் கலீல் முஸ்தபா மற்றும் மனாரியன் 88 பிரதான செயற்பாட்டாளர் ஐ.எல்.முக்தார் ஆகியோருக்கு நன்றிகளையும், பாராட்டுக்களையும் மிமா விளையாட்டு கழக செயலாளர் தெரிவித்தார்.

(நூருல் ஹுதா உமர்)

## இன்றைய வானிலை முன்னறிவிப்பு



மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களிலும் மாத்தளை, பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

பிரதான நகரங்களுக்கான வானிலை முன்னறிவித்தல்

அனுராதபுரம் - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்

மட்டக்களப்பு - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்

கொழும்பு -அவ்வப்போது மழை பெய்யும்

காலி - அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும்

யாழ்ப்பாணம் - பிரதானமாக சீரான வானிலை

கண்டி - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்

நுவரெலியா - அடிக்கடிமழை பெய்யும்

இரத்தினபுரி - அவ்வப்போது மழை பெய்யும்

திருகோணமலை - பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியம்

மன்னார் - பிரதானமாக சீரான வானிலை

## உக்ரைனில் பயங்கர தாக்குதல் - 49 பேர் பலி



வடகிழக்கு உக்ரைனில் நினைவஞ்சலி நிகழ்வு மீது ரஷ்யா நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் ஆறு வயது சிறுவன் உட்பட குறைந்தது 49 பேர் கொல்லப்பட்டதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

குப்யான் மாவட்டத்தில் உள்ள ஹ்ரோசா என்ற கிராமத்தின் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. அங்கு ரஷ்யப் படைகள் சமீபத்தில் தாக்குதல் நடவடிக்கைகளை அதிகரித்துள்ளன.

சுமார் 330 பேர் கொண்ட சிறிய கிராமத்தில் வசிப்பவர்கள் தாக்குதல் நடத்தப்பட்ட ஹோட்டலில் நினைவஞ்சலி நடத்தியதாக அந்த நாட்டின் உள்துறை அமைச்சர் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் நடந்த இடத்தில் மீட்புப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இது குறித்து கருத்து தெரிவித்துள்ள அந்நாட்டின் ஜனாதிபதி Volodymyr Zelensky, "மிருகத்தனமான தாக்குதலை" கண்டித்து, வான் பாதுகாப்பை வழங்குவதற்கு நட்பு நாடுகளுக்கு அழைப்பு விடுத்தார்.

"ரஷ்ய பயங்கரவாதம் நிறுத்தப்பட வேண்டும். பொருளாதாரத் தடைகளைத் தவிர்க்க ரஷ்யாவுக்கு உதவுபவர்கள் அனைவரும் குற்றவாளிகள்" என்றார்.

## கோட்டாபயவிற்கு காலவகாசம்



அரகலய போராட்டத்தின் போது நாடளாவிய ரீதியில் அவசர சட்ட ஒழுங்குகளை அமுல்படுத்துவதற்கு அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எடுத்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு தொடர்பில் ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய உயர் நீதிமன்றம் நேற்று (05) காலவகாசம் வழங்கியுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இந்த அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி. நேற்று முதல் எட்டு வாரங்களுக்குள் உரிய ஆட்சேபனைகளை தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என உயர் நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வைத்தியர் றிஸ்மியா ரபீக் எழுதிய "அறிவும் ஆரோக்கியமும்" நூல் வெளியிட்டு விழா



நிந்தவூர் மாவட்ட ஆயுள்வேத வைத்தியசாலையின் சமூகநல மருத்துவ உத்தியோகத்தர் (திருமதி) ஆர்.எப்.றிஸ்மியா எழுதிய "அறிவும் ஆரோக்கியமும்" என்ற நூல் வெளியிட்டு விழா (04) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல். எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் கௌரவ அதிதியாகவும், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் எம். பீ.அப்துல் வாஜித் விசேட அதிதியாகவும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இந்த நூலின் முதற் பிரதியை கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளருக்கும், இரண்டாம் பிரதியை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளருக்கும் நூலாசிரியர் வழங்கி வைத்தார்.

இந்நூல் வெளியீட்டு விழாவுக்கு ஆயுள்வேத வைத்திய அத்தியட்சகர்கள், பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலரும் கலந்துகொண்டு (திருமதி) ஆர்.எப்.றிஸ்மியா எழுதிய "அறிவும் ஆரோக்கியமும்" என்ற நூலின் பிரதிகளை பெற்றுக்கொண்டனர்.

(அபு அலா)

## நியூசிலாந்து அபார வெற்றி



2023ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டியில் நியூசிலாந்து அணி, நடப்பு செம்பியனான இங்கிலாந்து அணியை வீழ்த்தியுள்ளது.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்தது.

இதற்கமைய, முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 50 ஓவர்களில் 09 விக்கெட்டுக்களை இழந்து 282 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அந்த அணி சார்பில் அதிகபடியாக, ஜோ ரூட் 77 ஓட்டங்களை பெற்றுக்கொடுத்தார்.

பந்துவீச்சில், நியூசிலாந்து அணியின் மாட் ஹென்றி 48 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

இந்தநிலையில், 283 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 36.2 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

அந்த அணிசார்பில் அதிகபடியாக, டெவோன் கொன்வே 152 ஓட்டங்களையும், ரச்சின் ரவீந்திர 122 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில், இங்கிலாந்து அணியின் செம் கர்ரன் 47 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டை கைப்பற்றினார்.

இதன்படி இந்த போட்டியில் நியூசிலாந்து அணி 9 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

## நாட்டின் நிலைமை ஆபத்தானது – எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச



லிட்ரோ எரிவாயு விலையை 343 ரூபாவால் அதிகரித்தல், நீர் கட்டணத்தை அதிகரித்தல், மின்சார கட்டணத்தை 3 ஆவது முறையாகவும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் தயாராக உள்ள சூழ்நிலையால் நாட்டு மக்களால் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொருளாதாரத்தை விரிவாக்குவதற்கு பதிலாக பொருளாதாரத்தை சுருக்குவதே தற்போதைய அரசாங்கத்தின் கொள்கையாக இருப்பதால் மக்களின் வருமான மூலங்கள் குறைந்துள்ளன என்றும், இதனால் மக்களால் வாழ முடியாத நிலை ஏற்பட்டுள்ள தருணத்தில் எரிவாயு, மின்சாரம் மற்றும் நீர் கட்டணங்களை அதிகரிக்க எடுக்கும் நடவடிக்கையை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

எரிவாயு விலை அதிகரிப்பு தொடர்பில் நேற்று (05) பாராளுமன்றத்தில் கருத்து வெளியிடும் போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பணவீக்கம் குறைந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் கூறினாலும், நாட்டில் பெரும் சரிவு ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த 12 ஆண்டுகளில் 3765 யானைகள் இறந்துள்ளன என்றும், கடந்த 9 மாதங்களில் 291 யானைகள் உயிரிழந்துள்ளன என்றும், செப்டம்பர் மாதத்தில் மட்டும் 20 யானைகள் உயிரிழந்துள்ளன என்றும், இது வனவிலங்கு சார் மிகப்பெரிய சுற்றுச்சூழல் அழிவு என்றும், வன ஜீவராசிகள் அமைச்சின் வாடகை கூட செலுத்தப்படாத சூழலில் லிப்ட் கூட செயலிழந்துள்ளது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

கடந்த 48 மணி நேரத்தில் 11 பேர் காணாமல் போயுள்ளனர் என்றும், அவர்களில் 5 சிறார்களும் உள்ளனர் என்றும், வைத்தியர் விராஜ் பெரேராவின் கருத்துப்படி இந்நாடு போதைப்பொருள் சொர்க்கமாக மாறி Zombie Drugs என்ற புதிய போதைப்பொருளும் நாட்டுக்கு வந்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி நிதியத்தின் பிரகாரம், 10 இலங்கையர்களில் 6 பேர் ஆபத்தில் உள்ளனர் என்றும், 221 இலட்சத்தில் 123 இலட்சம் பேர் ஆபத்தில் உள்ள வேளையில், அரசாங்கம் எந்தப் பிரச்சினையும் இல்லாது போல் செயற்படுவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

அமைச்சரவை என்ற ரீதியில் மனசாட்சிக்கு உடன்பட்டா இந்த எரிவாயு விலையை அதிகரித்தீர் என கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், மக்கள் பக்கம் நின்று செயற்படுமாறும் கோரிக்கை விடுத்தார்.

## ஆப்ரிக்கன் பன்றி காய்ச்சல் வைரஸ் கண்டுபிடிப்பு



கேரள மாநிலம், கோழிக்கோடு மாவட்டத்தில் நிபா வைரஸ் தொற்று பாதித்து அடுத்தடுத்து 2 பேர் பலியான சம்பவம் கடந்த மாதம் பரபரப்பை ஏற்படுத்தியது.

இதையடுத்து அங்கு நோய்தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக தொற்றுபாதிப்பு கட்டுக்குள் வந்தது.

இந்நிலையில் கோழிக்கோட்டில் ஆப்ரிக்கன் பன்றி காய்ச்சல் வைரஸ் பாதிப்பு கண்டறியப்பட்டு இருக்கிறது.

கோழிக்கோடு மாவட்டம் ஜானகி காடு பகுதியில் ஒரு காட்டுப்பன்றி இறந்து கிடந்தது. அந்த பன்றியை மருத்துவ பரிசோதனை செய்தனர். அதில் அந்த காட்டுப் பன்றிக்கு ஆப்ரிக்கன் பன்றி காய்ச்சல் வைரஸ் பாதிப்பு இருந்தது கண்டறியப்பட்டது. இதையடுத்து ஆப்ரிக்கன் பன்றி காய்ச்சல் பரவினால், தொற்று பாதித்த பகுதிக்கு ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கும் பன்றிகளை அழிக்க வேண்டும் என்று விதிமுறை உள்ளது.

ஆனால் தற்போது காட்டுப்பன்றி இறந்து கிடந்த ஜானகிகாடு பகுதிக்கு ஒரு கிலோமீட்டர் சுற்றளவுக்கு எந்த பன்றி பண்ணைகளும் இல்லை. இதனால் அந்த பகுதியில் வேறு பன்றிகளை அழிக்க வேண்டிய சூழல் ஏற்படவில்லை என்று சுகாதாரத்துறையினர் விளக்கம் அளித்துள்ளனர். அதேநேரத்தில் கோழிக் கோடு மாவட்டதில் உள்ள பன்றி பண்ணைகளுக்கு பாதுகாப்பு வழிகாட்டு நெறி முறைகளை சுகாதாரத்துறை வழங்கியுள்ளது.

மேலும் பன்றி பண்ணை உரிமையாளர்களுக்கு ஆப்ரிக்கன் பன்றி காய்ச்சல் வைரஸ் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆப்ரிக்கன் பன்றி காய்ச்சல் வைரஸ் மனிதர்களுக்கு பரவாது என்று கூறியுள்ள சுகாதாரத்துறை, அதுபற்றி மக்கள் அச்சப்பட தேவையில்லை என்று தெரிவித்திருக்கிறது.